# ஸ்ரீ ராமாநுஜன் 255.



சென்னை ஸத்க்ரந்த ப்ரகாசனஸபா மூலம் மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை

ஆசிரியர்: ஸ்ரீ காஞ்சீ: P. B. அண்ணங்கராசாரியர்.

| ஸம்புடம் 22 | ஸௌம்யஹு பங்குனிமீ<br>1970 மார்ச்சுமீ | ஸஞ்சிகை 3 |
|---|---|---|


நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி

## 21. நந்திபுர விண்ணகரம் (நாதன் கோயில்).

செயற்கரிய செய்வோமைச் செய்யாமல் நெஞ்சே
மயக்குவார் ஐவர் வலியால்—நயக்கலவி
சிந்திபுர விண்ணகர மென்பர்திருச் செங்கண்மால்
நந்திபுர விண்ணகர நாடு.

| | | | |
|---|---|---|---|
| செயற்கு அரிய செய்வோமை | செய்ய முடியாத செய்கைகளையும் செய்ய வல்ல நம்மை | விண் நகரம் புர என்பர் | 'ஸ்வர்க்க லோகத்தை யரசாட்சி செய்வாயாக என்றும் ஏவுவர்கள்; (நீ அந்தத் துர்ப்போதனைக்கு உடன்படாமல்) |
| செய்யாமல் | செய்யவொட்டாமல் | | |
| வலியால் மயக்குவார் | (தமது) வலிமையால் மயங்கச் செய்பவர்களாகிய | | |
| ஐவர் | பஞ்சேந்திரியங்களென்னும் ஐந்து பிரபுக்கள் | திரு செம் கண் மால் | செந்தாமரைக் கண்ணனை திருமாலினது |
| நெஞ்சே | ஓமனமே!, (உன்னைநோக்கி) | நந்திபுர விண்ணகரம் நாடு | நந்திபுர விண்ணகரமென்னும் திருப்பதியைச்சேவிக்கச் செல்லு. |
| நயம் கலவி சிந்தி | 'நீ சிற்றின்பக் கலவியையே சிந்திப்பாயாக என்றும் | | |

* * * முதலடியில் "செயற்கரிய" என்னும் பாடத்தினும் "செயற்குரிய" என்னும் பாடம் சிறக்கு மென்று எம்பாசிரியர் அருளிச்செய்யக் கேட்டிருந்ததுண்டு; ஸ்வரூபாநுரூபமாகச் செய்ய நினைக்கும் நம்மை அங்ஙனம் செய்யவொட்டாமல் தடுப்பவை பஞ்சேந்திரியங்களென்று தெரிவிக்கிறபடி. இரண்டாமடியில் 'மயக்கு' என்று குகரமிருப்பதால் அதற்கும் சேர்ந்திருக்கும் 'செயற்கு...' என்பது. 'நயக்கலவி சிந்தி' என்றும் 'விண்ணகரம் புர' என்றும் பஞ்சேந்திரியங்கள் துர்ப்

போதனை செய்வதாக வைத்துப் பேசிய பேச்சின் கருத்து — இந்திரியங்களுக்கு வசப்படுவதனால் இத்தகைய கெட்ட எண்ணங்களுண்டாகு மென்பதேயாம்'. நந்திபுரவிண்ணகரமென்ற தலத்திற்கு ப்ராஸமாக 'சிந்தி, புர, விண்ணகரம் என்றிட்டனர். .... .... .... .... .... (2)

## அருளிச் செயல் வியாக்கியான நிதி

அருளிச் செயல் வியாக்கியான மென்பது நாலாயிர திவ்யப் பிரபந்த வியாக்கியானங்கள். இவற்றிலிருந்து நிதி திரட்டுவதாகப் பெரிய மனோரதங்கொண்டு அருளிச் செயல் வியாக்கியான நிதியென்று மகுடமிட்டேன். வியாக்கியானங்களில் அருமை பெருமை வாய்ந்த அனேக நிதிகளுண்டு. ஆளவந்தார், எம்பெருமானர் பட்டர், நஞ்சீயர் என்றிங்ஙனே சில ஆசார்ய ச்ரேஷ்டர்களின் திருநாமங்களை யிட்டு, அவர்கள் பணிக்கும் அர்த்த விசேஷங்களும், அவர்களைப் பற்றின ஐதிஹ்யங்களும் அருளிச் செய்யப்பட்டிருப்பது ப்ரஸித்தம். அன்றியும். சில கதைகளும், பொதுவான வார்த்தா விசேஷங்களும், அரையர் ஸேவை விசேஷங்களும், மற்றும் பலவகைப் பட்ட அற்புத விஷயங்களு முள்ளன. கடலில் காண முடியாத ரத்னங்களை யெடுத்துக் கொடுக்குமாபோலே மீண்டெடுத்துத் தருகிறோம். வியாக்கியானங்களில் பட்டரைப் பற்றியே விசேஷமாகவருதலால் முந்துற முன்னம் அவர் திருநாமம் கொள்ளப் படுகிறது. .... ... ....

### — பட்டர் —

1. க்ருஷ்ணவதாரமென்ருல் ஆழ்வார்களெல்லாருமாகப் பரிவராயிருப்பர்கள். இதுக்கடியென்? என்கிற ப்ரஸ்தாவத்திலே பட்டர் அருளிச் செய்யும்படி. ராமாவதாரத்தில் பிள்ளைகள் தாங்கள் ஆண்புலிகளான மிடுக்கராய், வழியே போய் வழியே வருங் குணாதிகருமாய். பிதா சம்பராந்தகனுமாய், மந்த்ரிகள் வஸிஷ்டாதிகளுமாய் ஊர் அயோத்யையுமாய் ஊரிலுள்ளராடங்கலும் * ஸர்வாந் தேவாந் நமஸ்யந்தி ராமஸ்யார்த்தே யசஸ்விந:* என்னும்படி மங்களாசாஸனபரர்களாய், ஊரிலுள்ள அசேதனப் பொருள்களு முட்பட * விஷயே தே மஹாராஜ! ராமவ்யஸனகர்சிதா:, அபி வ்ருக்ஷா: பரிம்லாநாஸ் ஸபுஷ்பாங்குர கோரகா:* என்னும்படியாய், காலம் நல்லடிக் காலமுமரயிருக்கையாலே அங்குத்தைக்கு ஒருபயமில்லை. இங்கு வந்து பிறந்தவிடம் சத்ருக்ருஹமாய், கம்ஸன் இடம் பார்த்து நலியும் துஷ்ப்ரக்ருதிகளை வரக்காட்டும் க்ரூரனுமாய். தமப்பன் ஸாதுவான இடையனுமாய், ஊர் அறிவொன்று மில்லாத இடைச் சேரியுமாய். பிள்ளைகள் தாங்கள் தீம்பருமாய், *தேனுகன் பிலம்பன் காளியனென்னும் தீப் ப்பூடுகளென்னும்படி எழும் பூண்டெல்லாம் அசுரப் பூண்டாய், காலம் கலிக்குத் தோள் தீண்டியாயிருக்கையாலே என் வருகிறதோ வென்று பரிகைக்கு ஆழ்வார்களல்லதில்லை — என்று.

2. பெரியாழ்வார் திருமொழி 3—6—3. *வானிளவரசு* என்னுமிடத்து வியாக்கியானத்தில்— "திருவனந்தாழ்வான் மடியிலும் ஸ்ரீ ஸேனபதியாழ்வான் பிரம்பின் கீழிலும் பெரிய திருவடி சிறகின் கீழிலுமாய்த்து இத்தத்வம் வளருவது" என்றிறே பட்டர் அருளிச் செய்யும்படி.

3. பெரியாழ்வார் திருமொழி 4-9-3. * அருள் கொடுத்திட்டு அடியவரையாட் கொள்வானமருமூர் அணியரங்கமே * என்ற விடத்து வியாக்கியானத்தில் — பிள்ளை திருநறையூரரையரும் பட்டரும் ப்ரதக்ஷிணம் பண்ணா நிற்கப் பின்னே ஸேவித்துக் கொண்டு போனேன்; அல்லாதாரெல்லாரும் கடுங்குதிரை போலே வாரா நிற்க, இவர்கள் திருக்கோபுரங்களையும் திருமாளிகைகளையும் கண்ணாலே பருகுவாரைப் போலே பார்த்து மகிழ்ந்து கொண்டு வருகிறபடியைக் கண்டு அல்லாதார்க்கும் இவர்களுக்கும் செயல் ஒத்திருக்க இவர்களான வாசி றோற்ற விருந்தபடியென்! என்றிருந்தேன் காணுமென்று நஞ்சீயரருளிச் செய்தபடி.

4. பெரியாழ்வார் திருமொழியிலேயே 4-9-6. *மைத்துனன் மார் காதலியை மயிர் முடிப்பித்து* என்ற விடத்து வியாக்கியானத்தில் — *இதம் து தே குஹ்ய தமம் ப்ரவக்ஷ்யாமி* என்றவோபாதி *இதம் தே நாதபஸ்காய* என்கிற விதுவும் முன்னே சொல்லிவைக்கவிறே அடுப்பது; அங்ஙன் செய்யாதே முந்துற அர்த்தத்தை யருளிச்செய்துவைத்துப் பின்னே *இதம் தே நாதபஸ்காய*. என்பானென்? என்ன, த்ரௌபதி குழல் விரித்துக் கிடக்கையாலே செய்வதறியாமல், மூலையிலே கிடந்தாரை முற்றத்திலே யிடுவாரைப் போலே பரமரஹஸ்யமானவற்றை வெளியிட்டுக் கொண்டு நின்றான்; பின்னை அர்த்தத்தின் சீர்மையை அநுஸந்தித்து கைப்பட்ட மாணிக்கத்தைக் கடலிலே பொகட்டோமே! என்று பதண் பதணொன்றான் காணுமென்றருளிச் செய்தார் பட்டர்.

5. திருப்பாவை முதற்பாட்டு ஆறாயிரப் படியில்—பிஷுக்களின் வாசல் ஆர்த்தர் கட்டணமாயிருக்குமா போலே ஸ்ரீ நந்தகோபர் வாசல் க்ருஷ்ணனாலே புண்பட்ட பெண்கள் கட்டணமாய்க் கிடக்கு மென்றருளிச் செய்வர் பட்டர்.

[பெரியாழ்வார் திருமொழி இரண்டாம்பத்து முடிவில் *வெண்ணெய்விழுங்கிப் பதிகமும் *ஆற்றிலிருந்து பதிகமும் ஆய்ச்சிகளின் முறையீடு—என்பது உணரத் தக்கது.]

6. திருப்பாவை யிரண்டாம் பாட்டு ஆறாயிரப்படியில் வ்யதிரேகத்தில் முடியும் படியான சக்ரவர்த்தி மோக்ஷம் பெறாதொழிவானென்? என்ன; இவனுக்குள்ளது நரகமே; பெருமாளுடைய ஆந்ருசம்ஸ்யத்தாலே ஸ்வர்க்கஸ்தனானான் என்றருளிச் செய்தார் பட்டர். [முமுக்ஷுப்படி சரமச்லோகப்ரகரணத்தில் "சக்ரவர்த்தியைப் போலே இழக்கைக் குறைப்பு" என்ற ஸ்ரீஸூக்தியின் வியாக்கியானங் கொண்டு தெளிக.]

7. திருப்பாவை மூன்றாம் பாட்டு ஆறாயிரப்படியில்—எம்பெருமான் ஸ்ரீவைகுண்டத்திலிருக்கும்போது ஸம்ஸாரிகளுடைய இழவுக்குத் திருவுள்ளம் நொந்திருக்கு

மென்று பட்டர்ருளிச் செய்ய, அத்தைக் கேட்டவர் "அவாப்த ஸமஸ்தகாமனாய் நிரதிசயானந்த யுக்தனாயிருக்கிற ஸர்வேச்வரனுக்கு ஓரிழவுண்டோ திருவுள்ளத்தில்?" என்ன, 'வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருசம் பவதி து:க்கித:' என்றது குணப்ரகரணமோ தோஷ ப்ரகரணமோ? என்றருளிச் செய்தார். (பட்டர்).

8. திருப்பாவை நாலாம் பாட்டு ஆருயிரப் படியில்-"நாச்சியார் விழி விழிக்க வொண்ணாதாப் போலே" என்றுள்ளது. '...விழிக்க வொண்ணாதென்றாப் போலே என்றும் பாடமுள்ளது. இருவகையான பாடத்திலும் பட்டருடைய ஐதிஹ்ய மொன்று உணரத்தக்கது. திருவரங்கம் பெரிய கோயிலில் பகற்பத்து முடிவு நாளன்று நம்பெருமாள் நாச்சியார்திருக்கோலம் பூண்டு ஸேவை ஸாதிக்க, பட்டர் எழுந்தருளி மங்களாசாஸனம் செய்யும் போது பெருமாளை நோக்கி தேவரீர் நாச்சியாருடைய வேஷத்தை ஏறிட்டுக் கொண்டதத்தனையொழிய அவள் போல் விழிவிழிக்க உம்மாலாகாதே" என்றும்.

9. திருப்பாவை அஞ்சாம்பாட்டு ஆருயிரப் படியில்-"யமுனைத் துறைவனை யென்ற விடத்து "கம்ஸ பயத்துக்கு அஞ்சி ஒளிக்க வந்து சேர்ந்தாரைச் சொல்லுமாபோலே சொன்னபடி பாரீர் என்று பட்டர். [திருத்தக் குறிப்பு;- இங்கு 'கம்ஸனபாயத்துக்கு அஞ்சி' என்பது சுத்தபாட மென்பர் பெரியோர்]

10. அப்பாட்டிலேயே பிள்ளாயென்ற விடத்து மூவாயிரப்படியில்—"பட்டர், திருவாய்ப் படியிலுள்ளாரில் சிந்தயந்தியோபாதி க்ருஷ்ண ஸம்ச்லேஷத்தில் புதியாரில்லையென்றருளிச் செய்வர்."

(குறிப்பு:—க்ருஷ்ணாவதாரத்தில் ராஸக்ரீடா ஸமயத்தில் திருக்குழலோசையைக் கேட்ட ஆயர்மாதர் ஸ்ரீபிருந்தாவனத்தேறப்போகப் புறப்பட்டவளவிலே மாமியார் மாமனார்களது கட்டளையை மீறிப்போவார் சிலரும், அதற்கு அடங்கி நிற்பார் சிலருமாயிருக்க, ஓர் ஆய்ப்பெண் மாமனாரை மீறிப்போகமாட்டாமல் உள்ளடங்கி நின்று அந்த வேணுகான கோஷ்டியிலேயே தான் கலந்திருப்பதாகப் பாவனை முற்றிக் கண்ணபிரானைத் தியானம் பண்ணி அவனிடத்தே நெஞ்சு பதிந்திருக்கையாலே வந்த நிர்மலஸுகத்தாலும், உண்மையில் அவனைக் கிட்டப்பெறுமையாலுண்டான அளவற்ற துக்கத்தாலும் ஸகலபுண்ய பாபங்களும் கழியப்பெற்று அவனைப்பெறாது தரிக்கமாட்டாமல் மூச்சடங்கி அவளுடைய தேஹமும் தன்னடையே வீடுபெற்றது. இந்த ஆய்ப்பெண்ணுக்கு ஒரு பெயர் கூறப்படவில்லை; அவளைப்பற்றி ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் சொல்லப்புக்க விடத்தில் "காசித்" என்று தொடங்கி "சிந்தயந்தீ ஜகத்ஸூதிம் பரப்ரஹ்மஸ்வரூபிணம் நிருச்ச்வாஸதயா முக்திம் கதாந்யா கோபகந்யகா" என்று கூறப்பட்டிருத்தலால் 'சிந்தயந்தீ' என்ற குணநாமத்தால் இவளை நம் பூருவாசாரியர்கள் வ்யபதேசித்தருளினர். இவ் விடைப்பெண் "எங்கும் காவலுங் கடந்து கயிறு மாலையாகி வந்து கவிழ்ந்து நின்றனரே" என்றபடி காவல் கடந்து போகமாட்டாமே மாமியார் மாமனார்களைக் கண்டு திடுக்கிட்டு நிற்கும்படியாலே இவள் கிருஷ்ணனிடத்து ஈடுபாட்டில் புதியள் என்பர் பட்டர். பழகியிருந்தால் தேங்காதே போகத் துணிந்திருப்பளன்றோ.)


(தொடரும்)

# ஆத்மானந்தர் செய்தியொன்று.

சென்ற மார்கழித்திங்களில் திருப்பாவையுபந்யாஸத்தில் *மாலே மணிவண்ணா!* பாசுரத்தின் சொற்பொழிவில் மாலென்னும் சொல்லின் பொருளை விவரித்து வருங்கால் 'கண்ணனென்னுங் கருந்தெய்வம்' என்கிற நாச்சியார் திருமொழிப் பாசுரம் பேச நேர்ந்தது. அப்போது,

𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍇𑌤𑍍𑌰𑍋𑌤𑍍𑌪𑌲𑌶𑍍𑌰𑍀𑌸𑌤𑌤𑌪𑌰𑌿𑌚𑌯𑌾𑌦𑍇𑌷 𑌸𑌂𑌵𑌰𑍍𑌧𑌮𑌾𑌨𑌃
𑌨𑌾𑌭𑍀𑌨𑌾𑌲𑍀𑌕𑌰𑌿𑌙𑍍𑌗𑌨𑍍𑌮𑌧𑍁𑌕𑌰𑌪𑌟𑌲𑍀𑌦𑌤𑍍𑌤𑌹𑌸𑍍𑌤𑌾𑌵𑌲𑌮𑍍𑌬𑌃 ।
𑌅𑌸𑍍𑌮𑌾𑌕𑌂 𑌸𑌂𑌪𑌦𑍋𑌘𑌾𑌨𑌵𑌿𑌰𑌲𑌤𑍁𑌲𑌸𑍀𑌦𑌾𑌮𑌸𑌞𑍍𑌜𑌾𑌤 𑌰𑌾𑌗𑌾
𑌕𑌾𑌲𑌿𑌨𑍍𑌦𑍀𑌕𑌾𑌨𑍍𑌤𑌿𑌹𑌾𑌰𑍀 𑌕𑌲𑌯𑌤𑍁 𑌵𑌪𑍁𑌷𑌃 𑌕𑌾𑌲𑌿𑌮𑌾 𑌕𑍈𑌟𑌭𑌾𑌰𑍇𑌃 ॥

என்கிற தத்வமுக்தாகலாப-மங்கல ச்லோகத்தின் பொருளைப் பன்னியுரைக்க நேர்ந்தது. இதைக் கேட்டிருந்தவர்களில் ஒருவரும், பரமரஸிக பண்டித ஸார்வபௌமரும், ஸஹ்ருதய ஸுஹ்ருந்மணியுமான ஸ்ரீ உ வே. R. V. சேஷாத்ரி (B.A., B.L., Advocate) ஐயங்கார் பிறகு நம்மிடம் வந்து ரஸித்துப் பேசுகையில் இந்த ச்லோகத்தின் பொருள் ஈஷத்தும் மாறுபடாமே இதை ஒரு தமிழ்ச் செய்யுளாக்கித் தரவேணுமென்றார். அவருடைய விருப்பத்தின்படியே அப்போதே செய்யுளொன்றை இயற்றித் தந்தேன்; அது வருமாறு;—



**கமலமாமாதின் குவளையொண்மலரேய் கண்களிற் காட்சியாற் கிளர்ந்து**
**கமலமாங் கொப்பூழ்மிசை சுழன்றெளிரு மளிகளின் சவிதான் கைதரவே**
**கமலைசேர் மார்பிற் கமழுநற்றுளவ மாலையின் கதிருஞ் சேர்ந்திலகக்**
**கமலைநல்யமுனைக் காந்தியால் மிகுத்த கண்ணனார் கருமை நங்காப்பே.**

மேலே யெடுத்துக் காட்டின சுலோகத்தின் பொருளும் இச் செய்யுளின் பொருளும் ஒற்றுமைப்பட்டிருந்தது கண்டும் செய்யுளின் அமைதியைக் கண்டும் ஸஹ்ருதயர் மிகமிக ரஸித்தார். (அச் சுலோகத்தைத் தமிழ் லிபியிலும் காண்மின்.)

லக்ஷ்மீநேத்ரோத்பலஸ்ரீ ஸததபரிசயாத் ஏஷஸம்வர்த்தமாந:
நாபீநாளீகரிங்கந்மதுகரபடலீதத்த ஹஸ்தாவலம்ப:,
அஸ்மாகம் ஸம்பதோகாந் அவிரலதுலஸீதாமஸஞ்ஜாதபூமா
காளிந்தீகாந்திஹாரீ கலயது வபுஷ: காலிமா கைடபாரே:

இனி சுலோகத்தின் பொருளைச் செய்யுளோடு விவரிக்கிறேன். [கைடபாரே: வபுஷ: காலிமா அஸ்மாகம் ஸம்பதோகாந் கலயது] கண்ணபிரானுடைய திருமேனியின் கருநிறம் நமக்குச் செல்வமிகுதியை விளைத்திடவேணும் என்பது இங்குக் கோரிக்கை. கரிய திருமேனியனான கண்ணபிரான் நம்மைக் காத்தருளவேணுமென்னுமல் அப்பிரானது திருமேனியின் கருமை நம்மைக் காத்திடுகவென்றது கவிசமத்காரம். *கண்ணனார் கருமை நங்காப்பே—என்றேன் செய்யுளில். அந்தக் கருநிறம் நான்கு விசேஷணங்களினால் சிறப்பிக்கப்படுகின்றது.

1. [லக்ஷ்மீநேத்ரோத்பல ஸ்ரீஸததபரிசயாத் ஸம்வர்த்தமான:] பிராட்டிதான் குவளையங்கண்ணியும் மையார்கருங்கண்ணியுமாவள். அன்னவள் எம்பெருமானது திருமேனியை அனவரதமும் உற்றுநோக்குகையாலே அக்கண்களின் கருமையும் இத்திருமேனியில் ஏறி இதன் கருமையை மிகைக்கச் செய்தது. நமது தமிழ்ச் செய்யுளின் முதலடியும் இதனைத் தெரிவிப்பதெங்ஙனே யென்னில், கமலமாமாதின் குவளையொண்மலரேய் கண்களிற்காட்சியாற்கிளர்ந்து] கமலமலரில் தோன்றிய கமலையின் குவளைமலர்போன்ற திருக்கண்களின் காட்சியால் வளர்ச்சிபெற்றதென்றவாறு. அது எதுவென்னில், ஈற்றடியில் ‘கண்ணனார்கருமை’ என்றது எழுவாய்.

2. [நாபீநாலீகரிங்கந் மதுகரபடலீதத்த ஹஸ்தாவலம்ப:] இஃது இரண்டாவது விசேஷணம். எம்பெருமானுடைய திருநாபிக்கமலத்தில் மதுபானார்த்தமாகச் சுழலமிடாநின்ற வண்டுகளின் கூட்டம் அந்தத் திருமேனியின் கருமைக்குக் கைகொடுத்ததாம். (அதாவது) அந்த வண்டுத்திரளின் கருமையினாலும் இத் திருமேனியின் கருமை மிகைத்ததென்றவாறு. (இதற்கு நமது தமிழ்.) [கமலமாங் கொப்பூழ்மிசை சுழன்றெளிரும் அளிகளின்சவிதான் கைதரவே] கீழ் விவரித்த வடமொழி விசேடணத்தின் கருத்தை அங்ஙனமே இதிற் காண்க. சவி — அளி.

3. [அவிரலதுலஸீதாமஸஞ்ஜாதபூமா] இது மூன்றுவது விசேஷணம் எம்பெருமான் *தோளிணைமேலும் நன்மார்பின்மேலும் சுடர்முடிமேலும் தாளிணைமேலும் புனைந்த தண்ணந்துழாய் மாலையனைகையாலே அப்பைந்துழாய் மாலைகளினொளியாலும் திருமேனியின் கருநிறம் மேன்மை பெற்றதாம். (இதற்கு நமது தமிழ்.) [கமலீசேர்மார்பிற் கமழுநற்றுளவமாலையின் கதிருஞ் சேர்ந்திலக] கீழ் விவரித்த வடமொழி விசேடணத்தின் கருத்தை அங்ஙனமே இதிற் காண்க.


4. [காலிந்தீகாந்திஹாரீ] இது நான்காவது விசேஷணம். கண்ணபிரான் *தூயபெருநீர்யமுனைத்துறைவனைகையாலும், யமுனையின் நிறம் கறுத்ததாகையாலும் அந்தக் கருமையையும் திருமேனியின் நிறம் கொள்ளைகொண்டதாம். (இதற்கு நம்து தமிழ்) [கமலநல்யமுனைக் காந்தியால்மிகுத்த] என்பது, கமலநல் யமுனை—தாமரை மலர்கள் மிக்க எமுனையாறு என்றபடி.

ஆக, குவளையங்கண்ணியான பிராட்டியின் திருக்கண்ணிறத்தினுல் மிகைத்ததும், திருநாபிக்கமலத்தில் மொய்க்கும் வண்டுகளினொளியால் மேன்மை பெற்றதும், திருத்துழாய் மாலைகளினொளியால் சிறப்புப் பெற்றதும், எமுனையாற்றினொளியைக் கவர்ந்ததுமான கண்ணபிரானது திருமேனியின் கருமை நிறம் நம்மைக் காத்திடுகவென்று தலைக்கட்டிற்ருயிற்று. ... ... ...

## சென்னை ஸத்காலக்ஷேப ஸபை

சென்னையில் நெடுநாள்ாக விளங்கிக் கொண்டிருந்த ஸபை பகவத்கதா ப்ரஸங்க ஸபை யென்பது. B. K. P. Sabha என்று சுருக்கமாக வழங்கப்பட்டு வந்தது. அந்த ஸபையின் மூலமாகவே அடியேன் 1931 ஆம் ஆண்டில் சென்னையில் உபந்யாஸங்களுக்காக அழைக்கப்பட்டுச் சென்றேன். வாரந்தோறும் சனி ஞாயிறுகளிலும், ஆண்டு தோறும் மார்கழியிலும் அந்தச் சபையின் மூலமாக இருபத்துநான்கு வருடங்கள் நடைபெற்ற உபந்யாஸங்களை முன்னின்று நடத்தி வைத்துக் கொண்டு போந்தவர்கள் சென்னையில் பிரபல தேக்கு மர வியாபாரிகளான M. D. Bros. என்று ப்ரஸித்த குடும்பஸ்தர்கள் என்பதை உலகமறியும். அவர்கள் ஸஹோதரர்கள் நால்வர். ஸர்வஜ்யேஷ்டரான துரைஸ்மி ஐயங்காரென்பவர் பலவாண்டுகட்கு முன்னமே பரமபதித்துவிட்டார். அவர்க்கு அடுத்தவர் சக்ரவர்த்தி ஐயங்காரென்கிற நாராயணையங்கார். இவர் நேற்று மார்கழி மாத முதலில், சில மாதங்கள் படுக்கையிலிருந்துவந்து பரமபதித்துவிட்டார். இவர்க்காக நாம் 20-12-69 அன்று காலக்ஷேப ஸபையில் நம்முடைய அநுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டோம். இவ்ருடைய ஸஹோதரர்களிருவர் ஸ்ரீமான் சேஷாத்ரி ஐயங்கார், ஸுதர்சனமையங்கார். இவர்களுக்கு மங்களாசாஸனம் பண்ணினேம், பண்ணுகிறேம்.

இவர்களுடைய ஆதரவையே கொண்டு சீரும் சிறப்புமாக நடந்துவந்த பகவத்கதா ப்ரஸங்க ஸபையிலிருந்து நாம் விலகின காலத்தில், இனி சென்னைக்கு வருவதும் போவதுமான சிரமத்தைவிட்டு ஸ்வஸ்தானத்திலேயே நியதவாஸம் பண்ணுவதென்று உறுதி கொண்டிருக்கையில் சில பெரியார்கள் ஸத்காலக்ஷேப ஸபை யென்று வேறொரு ஸபையை ஏற்பாடு செய்து அதன் மூலமாகப் பழைய படியே சனி ஞாயிறு தோறும் காலக்ஷேபங்கள் பழையபடியே நடந்துவரவேணுமென்று கோரினர்கள். அவர்களில் முக்கியஸ்தர்களான சிலரை இங்குக் குறிப்



விடுகிறேன். ஸ்ரீ. உ. வே A. ஸ்ரீநிவாஸய்யங்கார்; C. ஸுப்ராயலு செட்டியார்; A. V. கன்னைய நாயுடு; புலிபாடி ஸோமஸுந்தர ராவ் முதலானவர்கள். இவர்களுக்குள்ளும் தலைவராயிருந்த ஸ்ரீமான் உ. வே. V. ராஜகோபாலாசாரியர் (M.L.,) ஸ்வாமி சென்ற ஐப்பசி மாதத்தில் கீர்த்தி சேஷராய் விட்டாரென்பது ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அவருடைய ஸ்தானத்தில் ஸ்ரீமான் ஊரா. ஜகன்னாத செட்டியார் நியமிக்கப்பட்டு விளங்கி வருகிறார். இவர் திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தஸாரதி தேவஸ்தானத்திலும் டிரஸ்டியாயிருந்து வருகிறார். மற்றும் பல தர்மஸ்தாபனங்களிலும் ஈடுபட்டவர்.

மேலே குறிப்பிட்ட ஆஸ்திகமணிகளும் மற்றும் சில ஆப்தர்களும் ஸத்காலக்ஷேப ஸபையின் அபிவிருத்தியில் கண்ணுங்கருத்துமாக இருந்து வருகிறார்கள் சென்ற 1964 ஆம் வருஷம் வரையில் பழையபடியே சனி ஞாயிறு தோறும் உபந்யாஸங்கள் அடைவே நடைபெற்று வந்தன. அவ்வாண்டில் நமக்கு ஹ்ருதயகோசக் கோளாறு ஏற்பட்டதிலிருந்து சிரமங்களை மிகவும் குறைத்துக் கொள்ள நேர்ந்தபடியால் சனி ஞாயிறு தோறும் நடந்துகொண்டிருந்த காலக்ஷேபத்தை நிறுத்திக் கொள்ள நேர்ந்தது. மார்கழி மாதத்து ப்ரவசனம் மட்டும் இதுவரை ஒரு வருஷத்திலும் விச்சேதமடையாமல் நடந்து வருவதோடு மேன்மேலும் அபிவிருத்தி பெற்றும் வருவது அகிலாண்டகோடி ப்ரம்மாண்டநாயகன் அங்கணிரண்டுங்கொண்டு நோக்கியருள்வதனாலத்தனை. உயர் நீதிபதி கனம் உயர்திரு. A. அழகிரிசாமியவர்கள் சென்றவாண்டிற்போல இவ்வாண்டிலும் அடிக்கடி காலக்ஷேப ஸபைக்கு விஜயஞ்செய்து காப்பிட்டது குறிப்பிடத்தக்கது. •

இடையில் ப்ராஸங்கிகமானதொன்று தெரிவிக்கிறேன். மேலமாம்பலம் சாரதா வித்யா நிலயத்தில் 4—1—70 ஞாயிற்றுக்கிழமையன்று திருப்பாவை வித்வத்ஸதஸ் ஸொன்று நடைபெற்ற செய்தியை முன்னிதழில் அறிவித்திருக்கிறேன். அந்த



ஸதஸ்ஸின் உருவப்படமே இங்கு விளங்குவது. அன்றைய ஸதஸ்ஸை முன்னம் குறிப்பிட்ட கனம் ஹைகோர்டு ஜட்ஜ் அவர்கள் திறந்துவைத்தார்கள். ஸ்ரீஉ.வே. V. N. வெங்கடவரதாசார்ய ஸ்வாமிகள் (Advocate) அக்ராஸனம் வஹித்தார்கள். அன்று அந்த ஸதஸ்ஸுக்கு நானும் அழைக்கப்பட்டிருந்தேன். ஆனால் ஸபையில் அந்வயிப்பதற்குச் சிறிது தாமதமாயிற்று. ஸதஸ்ஸு தொடங்கி அரை நாழிகை யான பின் சென்று சேர்ந்தேன். அதற்குமுன் உயர்திரு. ஜட்ஜ்களவர்கள் பேசியதை நான் உடனே அங்கிருந்த வித்வான்கள் சொல்லக் கேட்டேன். அவர்கள் பேசியதென்னவென்றால், திருப்பாவைபோலவே திருவெம்பாவையும் பக்தி நூலாக விளங்கி வருகின்றதல்லவா? அதிலும் அர்த்தவிசேஷங்கள் இருக்கக் கூடுமல்லவா? ஸ்ரீவைஷ்ணவபண்டிதர்கள் திருப்பாவையில்மட்டும் விசேஷார்த் தங்களை விவரித்துக் கூறுவது தங்கள் சாதுரியத்தினலா? சாதுரியத்தினலாகில் அதனல் திருவெம்பாவையிலும் அர்த்தவிசேஷங்களைக் காட்டலாமல்லவா? என்று இங்ஙனே சில பேசினதாக நாமறிந்தோம். அதற்கு விடையாக அப்போதே நாம் உபந்யஸித்தது சுருக்கமாக இங்கு எழுதப்படுகிறது.

### மேலமாம்பலம் சாரதாவித்யாநிலயத்தில் P. B. A. உபந்யாஸம்

திருப்பாவையின் பெருமையைப்பற்றி நம்முன்னோர்கள் பல்வாறு பேசி யுள்ளார்கள். வசனநடையிலுள்ளவை நிற்க. செய்யுள்களாகப் பேசியவற்றில் ஒரு வெண்பாவை மட்டும் எண்டெடுத்துக் கொள்ளுகிறேன்.

"பாதகங்கள் தீர்க்கும் பரமனடிகாட்டும்
வேத மனைத்துக்கும் வித்தாகும்—கோதைத்தமிழ்
ஐயைந்து மைந்து மறியாத மானிடரை
வையஞ் சுமப்பதும் வம்பு." என்பது மார்கழி முப்பது மநுஸந்திப்பது.

இவ்வெண்பாவில், கோதைதமிழாகிய திருப்பாவைக்கு *பாதகங்கள் தீர்க்குமென்றும், *பரமனடிகாட்டுமென்றும் *வேதமனைத்துக்கும் வித்தாகுமென்றும் மூன்றுஅடைமொழிகள் இட்டிருப்பதாகக் காண்கிறோம்; மூன்றல்ல, ஒன்றுதான் என்றுங் கொள்ளலாம். எங்ஙனே யென்னில் *பாதகங்கள் தீர்க்குமென்பதைப் பரமனுக்கு விசேஷணமாக்கி, பரமனடிகாட்டுமென்பதை வேதத்திற்கு விசேஷணமாக்கி விடலாமன்றோ? ஆக, பாதகங்கள் தீர்க்குமவனான பரமபுருஷனுடைய திருவடியைக் காட்டிக் கொடுக்கவல்லதான வேதமனைத்துக்கும் வித்தாகவுள்ளது கோதைதமிழ்—என்று பொருள்பட்டு நிற்பதாகக் கொண்டால் இந்த வெண்பாவில் திருப்பாவைக்கு ஒரேவிசேஷணமுள்ளது என்று தேறிற்றாகும்.

அந்த வொருவிசேஷணம் போதும். திருப்பாவையை வேதமனைத்துக்கும் வித்தாகுமென்றால் இது அடியோடு பொருந்தாத அதிவாதமென்று நினைக்க நேரும். நித்யமாய் அபௌருஷேயமாயிராநின்ற வேதத்திற்குத் திருப்பாவை [வித்து] மூலகாரணமானது என்றால் பலரும் ஆக்ஷேபிக்கக் கூடியதாகுமல்லவா? ஆகவே அதுவன்றுபொருள்.

[𑌋𑌚𑍋 𑌯𑌜𑍂𑌂𑌷𑌿 𑌸𑌾𑌮𑌾𑌨𑌿 𑌤𑌥𑍈𑌵𑌾𑌥𑌰𑍍𑌵𑌣𑌾𑌨𑌿 𑌚,
𑌸𑌰𑍍𑌵𑌮𑌷𑍍𑌟𑌾𑌕𑍍𑌷𑌰𑌾𑌨𑍍𑌤𑌸𑍍𑌸𑍍𑌥𑌂 𑌯𑌚𑍍𑌚𑌾𑌨𑍍𑌯𑌦𑌪𑌿 𑌵𑌾𑌙𑍍𑌮𑌯𑌮𑍍"]

"ருசோ யஜூம்ஷி ஸாமாநி ததைவாதர்வணாநி ச,
ஸர்வம் அஷ்டாக்ஷராந்தஸ்ஸ்தம் யச்சாந்யதபி வாங்மயம்."

என்கிற பிரமாணவசனம் அனைவருமிசைந்தது. ஒரு விருக்ஷத்தின் சாகைகளும் உபசாகைகளும் மற்றுமெல்லாம் அதன் வித்துக்குள்ளே ஸூக்ஷ்மரூபேண அடங்கியிருப்பதுபோல், ஸகலவேதங்களும் திருவஷ்டாக்ஷரமாகிற மூலமந்த்ரத்தினுள்ளே அடங்கியிருப்பதாக வோதிக்கிடக்கையாலே இங்கு 'வேதமனைத்துக்கும் வித்து' என்று திருமந்திரம் விவக்ஷிதமாகிறது. அதுவாகும் என்றது—அதைப் போன்றது என்றபடியாம். "அறியவேண்டு மர்த்தமெல்லாம் இதுக்குள்ளேயுண்டு" என்று ஆசாரியர்கள் பிரதிஜ்ஞை பண்ணும்படி திருமந்த்ரமானது ஸகலார்த்த கர்ப்பிதமாயிருப்பதுபோலவே திருப்பாவையும் எல்லாப் பொருள்களையுமுள்ளடக்கிக்கொண்டிராநின்றது என்றதாகத் தேறிற்று.

தத்வ ஹித புருஷார்த்தங்களை யறிந்தால் ஸகலார்த்தங்களுமறியப்பட்டதாகும். இவற்றை நாம் திருமந்திரத்திலிருந்து அறிவது சிறிது அரிதாகும். திருப்பாவையிலிருந்து அறிவது மிகவெளிதாகும். அதனை யுபபாதிக்கிறோம் கேண்மின். [தத்வம்—ஹிதம்—புருஷார்த்தம்,] தத்வம் என்கிற சொல்லில் பரமாத்மதத்வம், ஜீவாத்மதத்வம் ஆகிய இரண்டும் அடங்கும். ஹிதம் என்றது—உபாயம் என்றபடி. ஸாதனமென்பது மதுவே. புருஷார்த்தம் என்றது -- பலன்என்றபடி. உபநிஷத்துக்களிலிருந்தும திருமந்திரத்திலிருந்தும் நாம் தெரிந்துகொள்பவை இவையேயாகும்.

முதலில் பரமாத்ம தத்வத்தை யறியும்வகை பேசுவோம். ஸகல ஜகத்துக்களுக்கும் காரணபூதனாயிருக்கையும், ஸர்வாத்மரக்ஷகனாயிருக்கையும், பர வ்யூஹ

விபவ அந்தர்யாமி அர்ச்சாரூபேண பஞ்சப்ரகாரமாயிருக்கையும் பரமாத்மஸ்வரூபமாகும். [*ஏகோ ஹ வை நாராயண ஆஸீத்; * யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே* அஜாயமாநோ பஹுதா விஜாயதே* ஸ உ ச்ரேயாந் பவதி ஜாயமாந:* பிதா புத்ரேண பித்ருமாந் யோநியோநௌ* இத்யாதி வேதோபநிஷத்துக்கள் தெரிவித்த கட்டளையிலே ஆண்டாளும், *நந்தகோபன்குமரன்—அசோதை யிளஞ்சிங்கம்* நாராயணனே நமக்கே பறைதருவான்* நாற்றத்துழாய்முடி நாரயணன்* என்றிவை முதலான பலபல திவ்ய ஸூக்திகளால் பரமாத்ம தத்வத்தை விவரித்தருளினள். பரவ்யூஹ விபவ அந்தர்யாமி அர்ச்சைகளாகிற பரம புருஷனுடைய பஞ்சப்ரகாரங்களையும் வெகு அழகாகக்காட்டியுள்ளாள் ஆண்டாள். எங்ஙனே யென்னில்; முதற்பாட்டில் (நாராயணனே) என்று பரஸ்வரூபம். 2. (பாற்கடலுள் பையத்துயின்ற பரமன்) என்று வ்யூஹம். 3. (ஓங்கியுலகளந்த வுத்தமன்) என்று விபவம். 4. (ஆழிமழைக்கண்ணா) என்று,* ஸ ஆத்மா; அங்காநி அந்யா தேவதா:* என்று உபநிஷத்து ஓதின கட்டளையிலே அந்தர்யாமித்வம். 6. (புள்ளரையன் கோயில் * கோயில்காப்பானே* உன்கோயில் நின்றிங்ஙனே போந்தருளி) என்று அர்ச்சாவதாரம்.

சேஷத்வம், அநந்யார்ஹசேஷத்வம், அசித்வத் பாரதந்த்ரியம் ஆகிய ஜீவாத்ம ஸ்வரூபத்தை ஆண்டாள் (*உன்றன்னோடுற்றோமேயாவோம் * *மாற்றாருனக்கு வலிதொலைந்து *அபிமான பங்கமாய் வந்து* என்றிவை முதலான பாசுரங்களினால் சுருக்கமும் பெருக்கமுமாகப் பேசினள். ஆக இதுவரையில் தத்வஹித புருஷார்த்தங்களில் தத்வநிரூபணமாயிற்று.

இனி அடுத்தது ஹிதம்; அதாவது உபாயம். இதை ஆண்டாள் (*தொழுது வாயினாற்பாடி மனத்தினால் சிந்திக்க* உன்னையருத்தித்துவந்தோம்* உன் பொற்றாமரையடியே போற்றும்*) என்றிவை முதலான பாசுரங்களினால் விளக்கினள். மிகுந்தது புருஷார்த்தம், எம்பெருமானார் தரிசனத்தில் நித்ய கைங்கரியமே பரமபுருஷார்த்தமாகக் கொள்ளப்படுகிறது, இதனை வேதாந்தங்கள் சேதநாசேதனங்களுக்கும் ஈச்வரனுக்கும் சரீராத்ம பாவத்தைச் சொல்லும் முகத்தாலே [அதாவது, *யஸ்யாத்மா சரீரம்* இத்யாதி முகத்தாலே] தெரிவித்தன. சரீரமானது ஜீவாத்மாவுக்குத் தானுள்ளவரையில் ஸகல கரணக்ராமங்களாலும் உழைப்பதாகிற கைங்கரியமே செய்துகொண்டிருக்கும்படியை நாம் ப்ரத்யக்ஷமாகக் காண்கிறோம். இதே போல சரீரலக்ஷண ஸமந்வயம் பெற்றிருக்கிற ஜீவாத்மாவும் பரமாத்மாவுக்குத் தொண்டுபூண்டமுத முண்கையையே ஸ்வரூபமாகவுடைத்தாயிருக்கும். இதனை ஆண்டாள் *உனக்கே நாமாட்செய்வோம்* என்று தலையாக வைத்துத் தலைக்கட்டினள். திருப்பாவைக்கு இதுதான் ஜீவநாடி யென்பதை பட்டர் தாமருளிச் செய்த திருப்பாவைத்தனியனில் "[illegible] —பாரார்த்த்யம் ஸ்வம் ச்ருதிசதசிரஸ்ஸித்தம் அத்யாபயந்தீ* என்பதனால் கைவிளக்கேற்றிக் காட்டியருளினர்.

இத்தனியனில் "ச்ருதிசதசிரஸ்ஸித்தம்" என்றருளிச் செய்திருப்பதொன்றே போதும் திருப்பாவையின் பெருமைக்கு. பரமவைதிகர்களில் தலைவரான ஸ்ரீமந் நாதமுனிகள் ஆளவந்தார் எம்பெருமானார் ஆழ்வான் பட்டர் முதலான ஸகல பூர்வாசாரியர்களும் பரிக்ரஹித்து அத்யயந-அத்யாபனங்களிற் கொண்டது திருப்பாவை முதலான திவ்ய ப்ரபந்தங்களில் உபநிஷத்துக்களின் பொருள்கள் பொதிந்துகிடக்கின்றனவென்பதுபற்றியே யன்றோ. இவற்றுக்குப் பிரதிகோடியாக ப்ரஸ்தாவிக்கப்படுகிற தேவாரம் திருவாசக மென்னும் நூல்களுக்கு ஆதிகாலந்தொட்டே வைதிகபரிக்ரஹம் அடியோடு இல்லாமை உலக மறிந்தது. ஏனில்லை யென்கிற காரணத்தை அவரவர்கள் தங்கள் விவேக சக்தியினால் உணர்ந்து கொள்ளலாம். திருப்பாவை ஜீயர் என்று எம்பெருமானார் பேர் பெற்றதுபோல திருவெம்பாவைபிக்ஷு வென்று இனியாவது ஒருவர் பெயர் பெறட்டும். பெயர்பெறவிடினும் பெயர்பெற ஆசையாவது உண்டாகட்டும்.

.... .... .... .... ....

அன்பர்களே! ஸத்காலக்ஷேப ஸபை யென்னும் மகுடத்தின் கீழ் நாமெழுதி வந்ததில் ப்ராஸங்கிகமானவிது நிற்க. இனி அந்த ஸபையைப் பற்றிச் சிறிது எழுதி முடிப்போமாக. இந்த ஸபையின் மூலமாக ஆரம்பிக்கப்பட்ட சில க்ரந்தங்களின் பிரவசனம் சாத்துமுறையாகாமல் நிற்கிறது. ஸ்ரீவசனபூஷணம் 1957 ஆம் வருஷத்தில் ப்ரவசனம் ஆரம்பிக்கப்பட்டு 1964-ல் மூன்று ப்ரகரணங்கள் வரையில் முடிவுபெற்று நின்றிருக்கின்றது. பகவத் விஷய ப்ரவசனம் பகவத்கதாப்ரஸங்க ஸபையிலேயே ஆரம்பிக்கப்பட்டு ஆறுபத்து வரையில் சாத்துமுறையாகியிருந்தது. பிறகு ஸத்காலக்ஷேப ஸபையின் மூலமாக 7, 8 பத்துக்களின் ப்ரவசனம் முடிவுபெற்று நிற்கிறது. ஸசேஷமான இவ்விரண்டையும் ஒருவாறு முடிக்கவேணுமென்று நமது ஸபையார் அடிக்கடி வேண்டி வருகின்றார்கள். அதற்குரிய உடல் நலத்தை நமக்கு எம்பெருமான் அருள்புரிய வேணுமென்று பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறோம். ....



சென்னை ரிலிஜியஸ் எண்டோமெண்டு கமிஷனரவர்களின் வரவேற்பு.

— கடிதம் —

# ஸ்ரீமத் காஞ்சி பிரதிவாதிபயங்கரம் சுவாமிகளின் திருப்பாவை காலக்ஷேப வைபவம்.

(திரு நா. வேணுகோபால் நாய்க்கர் B.A., B.L., காரியதர்சி. ஸ்ரீ வைஷ்ணவ மகாசங்கம் சென்னை. உதவி இயக்குநர் – அனைத்து இந்தியக் கைத்திறன். சென்னை.)

மார்கழி மாதமானால், தினமும் மாலை மூன்றுமணியானால் அடியேனது உள்ளம் குருக்ஷேத்திரபூமியாகி ஒரு யுத்தக்களமென்னும்படி யாகிவிடும். எதனாலென்னில், கேளுங்கள். ஸ்ரீமத் அண்ணங்கராசார்ய சுவாமிகளின் சொற்பொழிவுகளைக் கொள்ளை கொள்ளையாகத்தான் கேட்டிருக்கிறோமே! இன்று ஒரு நாள் வேறு ஜோலியில் அமர்ந்து அங்கேபோய் கேட்காமலிருந்துவிட்டால்தான் என்னவாம் – என்று ஒரு தோற்றம் ஏற்பட்டு அது வெற்றி பெற்றதுபோல் நிற்கும். பிறகு ஒரு நாழிகை பொறுத்து, இன்று ஸ்ரீமத் ஸ்வாமிகள் புதிதாய் அரிய பெரிய அர்த்தங்கள் சாதித்துவிட்டால் அதை இழந்தல்லவா போய்விடுவோம்! சாதித்துவிட்டால் என்று என்ன? தினமும் புதிய புதிய பலப்பல அர்த்தங்களை சாதித்துத் தானே வருகிறார்! அதெல்லாம் கேட்காவிட்டால் நஷ்டந்தானே! என்கிற மற்றொரு தோற்றம் தலையெடுத்து அது வெற்றி பெற்றதுபோல் முழங்கி நிற்கும்.

13—1—70 திருப்பாவை சாத்துமுறை நன்னாளில்



ரிலிஜியஸ் எண்டோமெண்டு கமிஷனர் அவர்களின் சொற்பொழிவு சமயக் காட்சி.

அதன் பிறகு ஒருநாழிகை பொறுத்து, சுவாமிகள் புதிய பெரிய அர்த்தங்களைச் சாதித்துவிட்டால்தான் என்ன? அது நித்யகல்யாணமாகக் கிடைப்பது தானே, நாளை மறு தினங்களில் போகும்போது சாதிக்கும் அர்த்தங்களைக் கேட்டாலே

போதும், இன்று வேறுஜோலி பார்ப்போமே! என்று ஒரு தோற்றமுண்டாகி இது வெற்றி பெற்றதுபோல் பறையடித்து நிற்கும்.

மணி ஐந்து. இன்னும் ஒரு மணிதானிருக்கிறது காலக்ஷேப மாரம்பிக்க. நாம் அர்த்தம் கேட்பது எப்படியாவதிருக்கட்டும். சுவாமிகளின் திவ்விய திரு மேனியைச் சேவிப்பதல்லவா பெரும்பாக்கியம்! உரையாற்றுகையில் பக்திததும்பும் முகபாவனை யென்ன! தலையமைப்பு, முகம்திருப்புதல், கைகளை உயர்த்தல் தாழ்த்தல்-இந்த சேவைகளை இழக்கவே கூடாதே! என்கிற தோற்ற முண்டாகி இது வெற்றிபெற்றதுபோல் சங்கபேரி முழங்கிநிற்கும்.

13—1—70 திருப்பாவை சாற்றுமுறை நன்னாளில்



ரிலிஜியஸ் எண்டோமெண்டு கமிஷனரவர்கள் ஸ்ரீ ஸ்வாமிகளிடம் அநுக்கிரகம் பெறுதல்.

ஐயகோ! நாம் 5, 10 நிமிஷம் தள்ளி காலக்ஷேப சபைக்குப் போய்ச் சேர்ந்தால் சுவாமிகளின் எதிரே போய் உட்கார இடவசதி கிடைக்காதே! வெளியில் தானே உட்காரவேண்டும்; அப்போது ஒரு சேவையும் கிடைக்காதே! இன்று தாமதமாய் விட்டபடியால் இங்கிருந்து கொண்டே அநுபவம் செய்து நிற்போம் என்றொரு தோற்றமுண்டாகி இது ஜயம் பெற்றதுபோல் முழங்கும். மணி ஐந்தரையாகி விட்டது. நேரே சேவிக்குமாறு இடம் கிடைக்காவிட்டால் தான் என்ன? எங்கே உட்கார்ந்தாலும் செவியின்பத்திற்குச் சேதமில்லையே. என்ன கம்பீரமான குரல்! என்ன அழுத்தம் திருத்தமான உச்சரிப்புகள்! சந்தர்ப்பத்திற்கு ஏற்ப தொனியை உயர்த்துவதும் தாழ்த்துவதும் ஆகா! குரல் ஜாலங்கள் தான் எத்தனை; வடமொழி சுலோகங்கள் சாதிக்க ஒரு பாணி; தமிழ்ப் பாசுரங்களுக்கு வேறு பாணி. உரைவளம் பொழிகையில் ஒரு நடை. இடையே அலுப்புத் தட்டாமலிருக்க ஒரு நடைமாற்றம், இதில் இடையிடையே நகைச்சுவை வேறு.

இதை யெல்லாம் ஒரு வேளை மிழந்தாலும் பேரிழவேயாதலால் புறப்பட்டுப் போகத்தான் வேணுமென்கிற ஒரு தோற்றம் முடிவாக ஓங்கி நிற்கிறது. ஸ்வாமி கள் திருப்பாவை சொற்பொழிவு ஏன்கிற வியாஜத்தினால் ஸகல ஞானபாகத் தையுமல்லவா அள்ளியள்ளி வாரி வழங்குகிறார் ஆழிபோல் மின்னும் கருத்துக் கள் எத்தனை! தாழாதே உதைத்த சரமழைபோல் உதிரும் சொல்லம்புகள் கணக்கிலடங்குமோ? முத்தும் மணியும்வயிரமும் நன்பொன்னுமல்லவா உதிர்வன.

இது நான் நாடகமாக எழுதுவதல்ல; எனது சொந்த அனுபவத்தில் ஏக தேசம் எழுதினதே. ஜோலிகளின் மிகுதியினால் சிற்சில நாட்களில் சபைக்குப் போய்ச்சேர ஆறரைமணியாய்விடும். அன்றன்று நடந்த அர்த்தங்களை உயிர் நண்பர் A. V. கன்னைய நாயுடுபோல்வாரின் வாயிலாகச் சுருக்கமாகக் கேட்டு ஒரு வாறு சமாதான மடைவேன். இவ்வநுபவங்களை ஒரு புத்தகமாக வெழுதவேணும்.

---



மேலே கண்ட வியாஸமெழுதிய வேணுகோபால் அவர்கள் டில்லியில் ராஷ்ட்ரபதி கிரியவர்களை பேட்டி கண்டகாட்சி

பண்டிதவுலகுக்குப் பெருங்கொடுந்துயரம்

ஒப்பிலியப்பன் ஸன்னிதியில் ஸ்ரீகார்ய ஸர்வபௌமராய் விளங்கின நவ நீதம் கிருஷ்ணமாசார்ய ஸ்வாமியின் கனிஷ்ட திருக்குமாரரும், வித்வச்சிரோமணி ஸ்ரீராமதேசிகாசார்யருடைய ஸஹோதரருமான [டாக்டர், M.A. P.H.D. பட்டங் கள் பெற்றவரான] சேஷாத்ரியாசாரியர் கல்விக்கடலாயும் ஆத்மகுண நிதியாயும் விளங்கினவர். லௌகிக வைதிகக் கல்விகளில் நிகரற்ற நிபுணர், பரமஸாத்விகர். இவரை நேற்று தைமாத முடிவில் இவ்வுலகம் இழந்த துயரம் வெகுநாள்வரையில் மறக்கமுடியாதது. இத்துயரம் ஒருவாறு மறையத் திருத்தமையனார் நீடூழி வாழ்க.

---

ஸ்ரீ:

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.



ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ காஞ்சீ ப்ரதிவாதி பயங்கரம்

# அண்ணங்கராசாரியர் ஸ்வாமியின்

ஸௌம்ய வருஷத்திய

## மீன விசாகோத்ஸவப் பத்திரிகை.

ஸ்ரீ ஸ்வாமியின் எழுபத்தொன்பதாவது திருநக்ஷத்திர பூர்த்தியை முன்னிட்டு
ஸ்ரீ காஞ்சியில் ஸ்வாமியின் திருமாளிகையில்
நாளது பங்குனிமீ 5உ (18—3—70) புதன்கிழமை முதல்
பங்குனிமீ 14உ (27-3-70) வெள்ளிக்கிழமை வரை

வேதபாராயணம், திவ்யப்ரபந்தஸேவை, ரஹஸ்யாநுஸந்தானம், ஸ்தோத்ரபாடம், வித்வான்களின் உபந்யாஸம் இவை நடைபெறும். ஆப்தர்கள் அனைவரும் கூடியிருந்து சிறப்பாக நடப்பிக்கும்படி ப்ரார்த்திக்கப்படுகிறார்கள்.

வேதபாராயண கோஷ்டிகள் கடந்த ஸம்வத்ஸரங்களிற்போலவே ஸாமவேதம், யஜுர்வேதம் க்ரமாந்தம் திருவீதி வலத்துடன் நடைபெறும்.

இங்ஙனம்,
ப்ரதிவாதி பயங்கரம் செல்வமணி என்கிற
ரங்கநாத தாஸன்.

காஞ்சீபுரம்,
1—3—70.

---

SRI KANCHI MAHA VIDWAN JAGADACHARYA SIMASANADHIPATHI

# P. B. ANNANGARACHARYA SWAMI'S

## Eightieth Birth Day Celebrations


The Eightieth Birth day of Sri Swami is being celebrated this year at his residence in Kanchi from (18-3-70 to 27-3-70 Friday. Vedas, Divya Prabandhams, Stotras and Rahasyas will be chanted. Procession of the Veda Goshti and lectures will also take place as usual.

You are cordialy invited to attend,
CHELLAMANI alias
P. B. RANGANATHACHARYA.

Kancheepuram,
1—3—70.

## உன்றன்னைப் பிறவி பெறுந்தனை நமக்கு —
## — இங்கொழிக்க வொழியாது.

திருப்பாவையில் இருபத்தெட்டாவது பாசுரமான "கறவைகள் பின் சென்று" என்கிற பாட்டை ஊன்றி நோக்குமிடத்து நெஞ்சு நீராயுருகுகின்றது. இது கண்ணபிரானை நோக்கிக் கோபிகள் சொல்லும் பாசுரமாக நிபந்திக்கப்பட்டிருப்பினும் சொல்லமைப்பு ஆண்டாளுடைய தென்பதில் ஐயமில்லையே. இத்தகைய வார்த்தைகள் கோபிகளுக்குச் சொல்லத்தெரியுமா? என்கிற விசாரம் நாம் செய்யத் தகாததாயினும் செய்துபார்ப்போம். வட மதுரையிலும் அதற்கடுத்த திருவாய்ப்பாடியிலும் அக்காலத்தில் இக்காலத்திற்போலவே தமிழ்ப்பாஷை நடையாடியிருக்க ப்ரஸக்தியில்லை. அந்நாட்டிற்குரிய பாஷையே பயிலப்பட்டிருக்க வேணும். கோபிகள் தங்களுடைய பக்திப் பெருங்காதலுக்கிணங்க தங்கள்



சாதிக்குரிய பாஷையில் ஏதோ கர்ணாம்ருத கீதங்களைப்பாடி யிருக்கிறார்களென்பதில் சந்தேகமில்லை. ஆண்டாள் தம்முடைய பாவநா ப்ரகர்ஷத்தாலே விலக்ஷணமான கருத்துக்களை யமைத்துப் பரம மதுரமான இத்திவ்வியப் பிரபந்தத்தை ஆக்கியிருக்கின்றாள். இப்படிப்பட்ட அமைப்பு எவருடைய புத்திக்கும் கோசரமன்று என்பதை அடியேன் ஒவ்வொரு சொல்லிலும் ஆழ்கிறபோது அறுதியிடுகின்றேன்.

ப்ரக்ருதம் "கறவைகள் பின் சென்று" என்கிற பாசுரத்தில் "குறையொன்றுமில்லாத கோவிந்தா! — அறிவொன்றுமில்லாத ஆய்க்குலத்து உன்றன்னைப் பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்" என்கிற வசனஸந்நிவேசமுண்டே. இதைக் காணும்போது 'ஆண்டாள்தான் கோபிகளில் ஒருத்தியாகவே ஆய்விட்டாள்' என்று நம் ஆசாரியர்கள் அருளிச் செய்வதில் அணுவேனும் அதிசயோக்தி சங்கிக்க இயலாதன்றோ. இப்பாசுரத்தை ஒருகாலன்றிக்கே பலகால் சொல்லிச் சொல்லிப் பாருங்கள்.

நம்மாழ்வார் திருவாய்மொழியில் காலைப்பூசற்பதிகத்தில் "சாவதிவ்வாய்க் குலத்தாய்ச்சியோமாய்ப் பிறந்த வித்தொழுத்தையோம் தனிமைதானே" என்றருளிச் செய்ததிற் பதின்மடங்கு மேற்பட்டது "உன்றன்னைப் பிறவி பெறுந்தனை

புண்ணியம் யாமுடையோமென்பது. ஆண்டாள் மெய்யான கோபியாயிருந்தாலொழிய இங்ஙனே பேசியிருக்க இயலாதென்னத் தட்டுண்டோ? ஏறிட்டுக் கொண்டு வரக்கூடியதன்றே இப்பாசுரம்.

இதற்குமேல் "உன்றன்னோடுறவேல் நமக்கிங்கொழிக்க வொழியாதென்றவிது கல் நெஞ்சையும் கரைக்கவல்லது. ஒரு ஆழ்வாரும் இங்ஙனே பேசியிருக்கவில்லையே! "உன்றன்னோடுறவு நமக்கொழிக்க வொழியாது" என்னாதே 'உறவேல்' என்றது மிகவழகியது. எம்பெருமானுக்கும் நமக்குமுள்ள உறவு ஒன்றன்று, பல என்பதைக் காட்டிநிற்கும் அச்சொல்லாற்றல். திருவஷ்டாக்ஷர மஹாமந்திரத்திலிருந்து ஒன்பது வகையான உறவுகள் தேறுகின்றனவென்று நம் ஆசார்யர்கள் அருளிச்செய்கிறார்கள். திருமந்திரம் நமக்குத் திருமங்கலியம் போன்றதென்று முமுக்ஷுப்படியில் பிள்ளை லோகாசாரியர் அருளிச்செய்திருப்பது ப்ரஸித்தம். உலகில் ஒரு கன்னிகையின் கழுத்தில் தாலியேறினவாறே தம்பதிகளுக்கு பதி பத்னீபாவமென்கிற ஓர் உறவு ஏற்பட்டதாகும்; திருமந்திரமாகிற தாலி நமது கழுத்தில் ஏறினவாறே ஓர் உறவு அல்ல; ஒன்பது உறவுகள் ஏற்பட்டனவாகும் அந்தவுறவுகளை நாம் சிந்தனையிற் பதியவைத்துக் கொள்வதற்காக நம் பூருவர்கள்

" பிதா ச ரக்ஷகச் சேஷீ பர்த்தா ஜ்ஞேயோ ரமாபதி:,
ஸ்வாம்யாதாரோ மமாத்மா ச போக்தா ச ஆத்யமநூதித: "

என்றொரு ச்லோகமியற்றி உபகரித்துள்ளார்கள். [ஆத்ய மநூதித ரமாபதி: பிதாச..............போக்தா ச] என்று அந்வயம் ஆத்யமநு வாவது – மூலமந்த்ரம். மநு: என்றது மந்த்ர: என்றபடி. ஆத்ய மநுவென்று மூலமந்திரத்தைச் சொல்லிற்றாயிற்று. அதில் பிரதி பாதிக்கப்பட்ட ரமாபதி:– ச்ரிய: பதியானவன் பிதாவாயும் ரக்ஷகனாயும் சேஷியாயும் பர்த்தாவாயும் ஜ்ஞேயனாயும் ஸ்வாமியாயும் ஆதாரனாயும் ஆத்மாவாயும் போக்தாவாயு முள்ளான் – என்பது சுலோகத்தின் பொருள் அவன் பிதாவானால் நாம் புத்ர ராகிறோம்; அவன் ரக்ஷகனானால் நாம் ரக்ஷ்யராகிறோம்....... அவன் போக்தாவானால் நாம் போக்யராகிறோம். ஆக இவை ஒன்பது வகையான உறவுகள். இவற்றைத் திருமந்திரத்திலிருந்து உய்த்துணரும் வழிகேண்மின் ;

## — மூன்றுறவுள்ள மூன்று உறவுகள் —

எங்ஙனே யென்னில்; அதில் முதல் பதம் ப்ரணவம். அது அகாரமென்றும் உகார மென்றும் மகாரமென்றும் [மூன்றக்ஷரமான] மூன்று பதங்கொண்டது முதற்பதமான அகாரத்தில் மூன்று உறவுகள் தோன்றும் 1. பிதாபுத்ரபாவம். 2. ரக்ஷ்ய ரக்ஷகபாவம், 3. சேஷசேஷிபாவம். அந்த ஒரு அக்ஷரத்தில் இந்த மூன்று உறவுகள் எங்ஙனே தோன்றுகின்றன வென்னில்; அகாரத்திற்கு ப்ரக்ருதி சக்தியென்றும் தாதுசக்தியென்றும் இரண்டு வகையான சக்திகளுண்டு. "அகாரோ வை ஸர்வா வாக்" என்றும் "அகர முதலவெழுத்தெல்லாம்" என்றும் சொல்லுகிறபடியே அகாரமானது எல்லா எழுத்துக்களுக்கும் முதன்மையாயிருந்து கொண்டு, தனக்கு அர்த்தமான எம்பெருமான் உலகுக்கெல்லாம் முதல்வன் என்று காட்டுதலாகிறவிது ப்ரக்ருதி சக்தியெனப்படும். "ஆதிபகவன் முதற்றே யுலகு" என்ற குறளும் இதனையே காட்டிற்றாகும். ஆகவே, அகாரத்தில் ப்ரக்ருதி

சக்தியினல் ஏற்பட்டவுறவு காரியகாரண பாவம் (அல்லது) ஜந்ய ஜநகபாவம், (அல்லது) பிதா புத்ரபாவம் என்பதாம். அந்த அகாரமானது (அவ - ரக்ஷணே) என்கிற தாதுவிலிருந்து தேறினதாகையாலே எம்பெருமான் ஸர்வரக்ஷகன் என்றதாகும். இதனல் (2) ரக்ஷ்ய ரக்ஷகபாவமாகிற வுறவு தேறிற்ருகிறது. இதுதான் தாது சக்தி ஸித்தமெனப்படும். இந்த அகாரத்தின்மேல் வியாகரண சாஸ்த்ரப்படி (வைதிக ப்ரக்ரியையில்) சதுர்த்தீ விபக்தியிருந்து லோபித்ததாகக் கொள்ளப்படுகிறது. இல்லாவிடில் அந்வயிக்கவேமாட்டாது. அந்த விபக்தியானது 'அவனுக்கு சேஷப்படுகை' என்கிற பொருளைக் காட்டுதலால் (3) சேஷ சேஷி பாவம் என்கிற வுறவு தேறிற்று. ஆக அகாரத்தில் மூன்றுறவுகள்.

— நான்காவது உறவு — பதிபத்நீபாவம் —

இனி அடுத்துள்ள உகாரமானது அவதாரணப் பொருளதாய் எம்பெருமானுக்கே சேஷப்பட்டது என்று காட்டுதலால் "கண்டாரிகழ்வனவே காதலன் தான் செய்திடினும், கொண்டானையல்லா லறியாக் குலமகள் போல்" (பெருமாள் திருமொழி) என்கிறபடியே பதிபத்நீபாவமாகிற உறவு தேறுகின்றது.

— ஐந்தாவது உறவு — ஜ்ஞாத்ருஜ்ஞேயபாவம் —

அதற்கு அடுத்துள்ள மகாரமானது 'மந ஜ்ஞாநே" "மந-அவபோதநே" என்கிற தாதுக்களிலிருந்து நிஷ்பந்நமாகி ஜ்ஞாதாவான ஆத்மாவைச் சொல்லுதலால் ஜ்ஞாத்ரு ஜ்ஞேய பாவமென்கிற உறவு தேறிற்று. எம்பெமான் அறியப் படுமவன், ஆத்மா அறிகின்றவன் என்றவாறு. 'ஒண் தாமரையாள் கேள்வனொருவனையே நோக்குமுணர்வு" என்கிற பொய்கையார்பாசுரம் இங்குக்காண்க.

— ஆறாவது உறவு — ஸ்வஸ்வாமிபாவம் —

அதற்குப்பிறகு உள்ள நம: பதத்தினல் தன்னை ரக்ஷித்துக் கொள்வதில் தனக்கு எவ்விதமான உரிமையும் இல்லையென்று காட்டுகிற முகத்தினல் ஆத்மவர்க்கமெல்லாம் எம்பெருமானுடைய ஸொத்து என்று காட்டுதலால் ஸ்வஸ்வாமி பாவம் என்கிற வுறவு தேறிற்ருகிறது. அவன் ஸ்வாமி; நாம் ஸொத்து.

— ஏழாவது உறவு — ஆதாராதேயபாவம் —

இனி நாராயணபதத்தை யெடுத்துக்கொண்டால் இதற்குத் தத்புருஷ ஸமாஸ மென்றும், பஹுவ்ரீஹி ஸமாஸமென்றும் இருவகையான வ்யுத்பத்தி மார்க்கங்கள் கொள்ளப்பட்டு, நாரபதார்த்தமான ஸகல வஸ்துக்களுக்கும் எம்பெருமான் ஆதாரமென்றும் அந்த ஸகல வஸ்துக்களையும் தான் ஆதாரமாக வுடையவனென்றும் தெரிந்துகொள்ளுகிருேம். ஆதலால் நாராணும் அயநம் என்கிற தத்புருஷனல் ஆதாராதேயபாவமென்கிற உறவு தேறுகின்றது.

— எட்டாவது உறவு — சரீராத்மபாவம் —

நாரா: அயநம் யஸ்ய ஸ: என்கிற பஹுவ்ரீஹியால் சரீரசரீரிபாவமென்கிற வுறவு தேறுகின்றது. நாரங்கள் பகவானிடத்திலே யிருக்கின்றன என்பது தத்புருஷ ஸித்தம். நாரங்களிலே பகவானுளன் என்பது பஹுவ்ரீஹி ஸித்தம். அவற்றிலே இவனிருப்பதாவது அவற்றை உடலாகக்கொண்டு தான் அவற்றுக்கு உயிராக இருப்பதேயாதலால் இதனல் சரீராத்மபாவம் ஸித்தித்ததென்னக் குறையில்லை. ஸகல சேதநா சேதனங்களும் சரீரம்; அவன் சரீரி.

— ஒன்பதாவது உறவு — போக்த்ரு போக்யபாவம் —

இனி அந்த நாராயண பதத்திலுள்ள சதுர்த்தியானது, காகாக்ஷிந்யாயத்தாலே முன்னும் பின்னும் (தன்னிடத்திலும்) அந்வயிக்கின்ற நமஸ்ஸினால் பரிஷ்காரம் பெற்று, நாராயணனுக்குச் செய்யப்படுகின்ற கைங்கரியத்தின் போகமும் அவனுக்கேயன்றி இந்த ஜீவனுக்கில்லையென்று நிஷ்கர்ஷித்துக் காட்டுதலால் போக்த்ருபோக்யபாவம் என்கின்ற உறவைத் தெரிவிக்கின்றது. எம்பெருமான் போக்தா, ஜீவாத்மா போக்யன் என்றவாறு. ஜீவாத்மாவை போக்தாவாகவும் எம்பெருமானை போக்யனாகவும் கொள்வதும் ஒருபுடையுண்டெனினும் திருமந்திரத்தில் வடிக்கட்டின பொருள் முந்துறப் பணித்ததேயாகும். ஆகத் திருமந்திரத்தினால் நவவித ஸம்பந்தங்கள் தெரியவந்தன. .... .... *


## ப்ரேமப்ரகாசனம்.

இந்த ப்ரகடனம் ஆவச்யகமன்றாயினும் உலகின் மருள் நீங்க வுதவுமென நினைக்கிறேன். ஆங்காங்கு உபந்யாஸங்கள் செய்துகொண்டு ப்ரஸித்தராய் விளங்குகின்ற ஸ்ரீமாள் உ. வே. K. V. ஸந்தானகோபாலாசார்ய ரென்கிற ஸஹ்ருதயர் 4-2—70ல் நெய்வேலியிலிருந்து நமக்கொரு கடிதமெழுதினர் அதை ஸ்ரீராமாநுஜனில் வெளியிடுவோமா என்று நமக்குத் தோன்றிற்று. எதனால் தோன்றிற்றென்னில், அவர்க்கும் நமக்கும் பிரபலமான மனஸ்தாபமிருப்பதுபோல் பலர் நினைத்து விஷமப்ரசாரம் செய்துவருவதனால் அதற்கு இடமறும் என்பது பற்றியே. நாம் விவாத விஷயங்களில் வியாஸங்கள் எழுதும்போது வ்யக்திகளின் பெயர்களைக் குறிப்பிட்டாலும் விஷயத்தில்மட்டும் நோக்கேயொழிய வ்யக்திகளில் ப்ரேமத்திற்கு எள்ளளவும் குறை கிடையாதென்பதை நமது பரமாப்தரான ஸ்ரீமான் M. S. வரதாசாரியார் (அடையார் வாஸி) போன்ற பல ஸஹ்ருதயர்கள் உள்ளபடி யுணர்ந்தவர்கள். சிலவிஷமிகளுக்கு விபரீத ப்ரசாரமே போதுபோக்காயிருக்கும். அத்தகைய ப்ரசாரம் பிராமாணிகர்களிடத்தில் விலை செல்லாமலிருக்க வேணுமென்பதே நமது ஆசை மேலே ப்ரஸ்தாவித்த ஸந்தானகோபாலாசாரியர்க்கு, அவருடைய கடிதத்தை வெளியிட அனுமதிகேட்டு நாம் கடிதமெழுதின போது நெஞ்சுகனிந்த அன்பையும் ஆர்வத்தையுங்காட்டி வெகு விரிவான பதில் கடிதமெழுதினரவர். அவருடைய முதற்கடிதத்திலுள்ள சிலவார்த்தைகளிவை;

> '...ஸ்வாமி ஸந்நிதியில்...விஜ்ஞாபனம். தேவரீரை சென்னையில் நுங்கம்பாக்கம் ஸதஸ்ஸில் சந்தித்தும் எதோ அவஸர ஜோலியினால் விரைவில் பிரியநேர்ந்தது. ஸ்வாமி வருஷத்திற்கு வருஷம் புதிது புதிதாக உபகரிக்கும் ஸ்வாபதேச வியாக்கியானபலத்தால்....அடியேன் உண்மையான பக்தியுடன் வாணி மஹாலில் திருப்பாவை சொல்லும் போது அவற்றைக் கூறினேன். ஸ்வாமியின் சிஷ்யர்களையும் கேட்டறியவேணும். அடியேன் அந்தத் திருவடிகளாத்தில் மாறாத பக்தி கொண்டவன். அவ்விடத்து ப்ரசுரங்களை யெல்லாம் அடியேனுக்கு அநுக்ரஹித்து வரவேணும்...தாஸன் கே வி ஸந்தானகோபாலன்."

## ஸ்ரீமதுபயவே. ஆழ்வார் திருநகரி இளையவில்லி ஸ்ரீஸூக்திரத்நாகர.

## சடகோபாசார்ய ஸ்வாமியின் திருப்பாவை ப்ரவசனத் தொடக்க கோஷ்டி.



ஸ்ரீமதுபயவே. இளையவில்லி ஸ்வாமி இருபது ஸம்வத்ஸரங்களாகத் திருவரங்கம் பெரியகோயிலில் நித்யவாஸமாக எழுந்தருளியிருக்கும் விஷயம் அனைவருமறிந்ததே. திருச்சியிலுள்ள திருக்கச்சிநம்பி ஸபையதிகாரிகளின் ப்ரார்த்தனைக்கிணங்கி அவ்விடத்தில் அடிக்கடி அனேக ப்ரவசனங்கள் நடத்தி வருவதும் ப்ரஸித்தமே. நிகழும் ஸௌம்ய ஸம்வத்ஸரம் கார்த்திகை மாத முடிவில் 14—12—69 ஞாயிறன்று திருப்பாவை காலக்ஷேபம் தொடக்கமாயிற்று. அப்போது, ஸ்ரீமத் பரமஹம்ஸ காஞ்சீ. அழகிய மணவாள ராமானுஜ ஜீயர் ஸ்வாமி, ஜகத்விக்யாதப்ரபாவரான ஸ்ரீமத் பரமஹம்ஸ. ஸ்ரீமந் நாராயண ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி முதலான பல பெரியார்கள் கோயிலிலிருந்து ஷ ஸபா மண்டபத்திற்கு எழுந்தருளியிருந்து சிறப்பித்த ஸந்தர்ப்பத்தின் காட்சி இது. மார்கழி முப்பது நாளும் திருப்பாவைப் ப்ரவசனம் குறையற நடந்தேறி, தைமாதத்தில் ஸ்ரீமந்நாராயண ராமாநுஜ ஜீயர் ஸ்வாமியின் ஆத்யக்ஷ்யத்தில் வெகு சிறப்பாகச் சாத்துமுறை நடந்தது. பலமாதங்களாக அதே ஸபையில் இளையவில்லி ஸ்வாமி உபந்யஸித்து வந்த பெரிய திருமொழி திருக்குறுநெடுந்தாண்டகங்களின் சாத்துமுறையும் விசேஷ வைபவமாக நடந்தேறியது. ஸ்வாமிக்கு ஏற்கெனவே நெடுநாளாக ஸ்ரீஸூக்திரத்நாகர பிருது ப்ரஸித்தமாகவுள்ளது. இப்போது திருப்பாவைக் கடல்மணி யென்கிற பிருதும் ஸ்வாமியின் திருநாவீறுக்குத் தகுதியாக ஸபையாரால் வழங்கப்பட்டது. ப்ரவசன வைபவம் மேன்மேலு மோங்குக. ... *

# ஆஸ்திக பக்தர்கட்கு ஆனந்தகரமான செய்தி.

அரசாங்கம் தருமநெறிக்குத் தவறுதலாக நடந்து கொள்ளுமோ வென்கிற ஸந்தேஹ மேற்படுங்கால் தக்க முறையில் தருமநெறியை புலனாக்கிக் குறை நீக்கக் கோருவது ஆன்றோர் கடமையாதலால், சிலமாதகாலமாக தேவஸ்தானங்களில் அர்ச்சகர் நியமன விஷயமாக உலவிவரும் பிரவாதத்தினால் கலக்கமடைந்த பல பெரியார்கள் மடாதிபதிகள் ஸ்ரீரங்கம் முதலான விடங்களிலிருந்து சென்னைக்குச் சென்று முதன் மந்திரியைச் சந்தித்து விஷ்ணு கோவில்களில் அநாதி காலமாகவுள்ள தடைமுறையை மாற்றுமலிருக்க வேண்டுமென்று எடுத்துக் கூற திட்டமிட்டிருந்தார்கள் தைவவசமாக பிப்ரவரி 19 முதல் 22வ. முடியத் திருச்சியில் நடத்த நிச்சயித்திருந்த தி. மு. க. மாநாட்டிற்கு மந்திரிகளனைவரும் விஜயம் செய்வார்களென்று தெரியவந்ததனால், புத்தூர் ஸ்ரீவைஷ்ணவஸுதர்சன பத்திராதிபரான ஸ்ரீமதுபயவே. (அட்வகேட்) S. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி "தமிழக அரசின் முதன் மந்திரிக்கு வைணவமதத் தலைவர்களின் வேண்டுகோள்" என்கிற 8 பக்கங்கொண்ட பத்திரிகையை வெகு விரைவில் அச்சிட்டு உடனே ஸ்ரீரங்கத்திலுள்ள ஸ்ரீமத் பரமஹம்ஸ ஸ்ரீமந் நாராயண ஜீயர் ஸ்வாமி, ஸ்ரீரங்க நாராயண ஜீயர் ஸ்வாமி. கோயிலண்ணன் ஸ்வாமி பட்டர் ஸ்வாமி முதலான ஆசார்ய புருஷர்களிடத்திலும் தென்கலை வடகலை வித்வான்கள் முதலிய அனைவரிடத்திலும் கையெழுத்து வாங்கி 19—2—70 மாலையில் ஸ்ரீமந் நாராயண ஜீயர் ஸ்வாமியின் ராமதூதனில் அனைவரையும் ஏற்றிக் கொண்டு முதன் மந்திரி தங்கியிருக்கும் மாளிகைக்குச் சென்று அரும்பெரும்பாடுகள் பட்டு முதல்வரை பேட்டி காண அனுமதி பெற்றனர்.

பல மந்திரிகளும் பத்திரிகை நிருபர்களும் பிரமுகர்களும் சூழ்ந்திருக்க (மேலே குறித்த) ஜீயர் ஸ்வாமிகளிருவரும் புத்தூர் அட்வகேட் ஸ்வாமியும். திருச்சி, திருக்கச்சிநம்பி சபைக் கார்யதர்சி, திரு. கண்ணபிரான் நாயுடுவும் முதன் மந்திரியை பேட்டி கண்டார்கள். அச்சிட்டுக் கையெழுத்துகள் வாங்கிக் கொண்டு போன வேண்டுகோள் பத்ரிகையை முதல்வர் அன்போடு பெற்றுக் கொண்டார். அப்போது ஸ்ரீமந் நாராயண ஜீயர் ஸ்வாமிகள் —

"[தி. மு. க. அரசு வந்தவுடன் ஆஸ்திகர்களுக்கு ஏதாவது இப்படி நேருமோ என்று நாம் பயந்தோம். ஆனால் இதுவரையில் அரசு நல்ல பெயர் எடுத்து வருகிறது. இனியும் அப்பெயருக்கு இழுக்கு நேரும்படி நடக்க வேண்டாம் தமிழ் நாட்டில் உள்ள கோயில்களில் ஒரு சதவீதமே சாஸ்திரரீதியில் ப்ராண ப்ரதிஷ்டை செய்யப்பட்ட கோயில்களாயிருக்கும். இவற்றை ஏற்கெனவே உள்ள ரீதியில் பாதுகாக்க வேண்டியதே அரசின் கடைமையாகும்"] என்று பொருள்பட முதன் மந்திரிக்கு எடுத்துரைத்தார் அதற்கு முதன் மந்திரி, "இவ்விஷயத்தில் உங்களையெல்லாம் கலந்து கொள்ளாமல் எதுவும் செய்யமாட்டோம். எவர் மனமும் புண்படாதபடி முடிவெடுக்க வேண்டும் என்பதே அரசின் விருப்பம். ஆயினும், பலதரப்பினர் கூறுவது அனைத்தையும் ஒப்புக்கொள்வது இயலாத காரியம். முடிவெடுக்குமுன் உங்களை அவசியம் கலந்துகொள்வோம்" என்று உறுதியளித்தார். முதன் மந்திரியோடு பேட்டி இவ்வண்ணமாக முடிவடைந்தது. இந்த பேட்டியின் விபரங்கள் பிரபலமான ஆங்கில தமிழ் தினசரிப் பத்திரிகைகள் அனைத்திலும் நன்கு பிரசுரிக்கப்பட்டிருப்பதை உலகம் வாசித்திருக்கும்.

jd. No. 2975 ஸ்ரீராமாநுஜன்

ஸத்க்ரந்த ப்ரகாசன ஸபையின் விளம்பரம்

1966 ஜனவரியீ புதுப்பிக்கப்பட்ட ஸத்க்ரந்த ப்ரகாசன ஸபைக்கு வருடச் சந்தா ரூ. 25—00. செலுத்தி மெம்பர்களாகச் சேரவேண்டியது. அவர்களுக்கு ஸ்ரீராமாநுஜன் பத்திரிகை தனிச் சந்தா இல்லாமல் அனுப்பப்பட்டுவருவதுடன் இருபத்தைந்து ரூபா விலையுள்ள புத்தகங்களும் அளிக்கப்படும். அவர்கள் நம்முடைய புத்தக ஜாபிதாவைத் தருவித்துப் பார்த்து அதில் தங்களுக்கு விருப்பமான (25 ரூ. விலையுள்ள) நூல்களுக்கு ஆர்டர் செய்யலாம்.

இப்படிக்கு,
ஷை ஸபையின் பிரஸிடெண்டு P. B. A.

P. B. அண்ணங்கராசார்ய ஸ்வாமிகளின் நூல் துறைகள்.

1. நாலாயிர திவ்யப்பிரபந்தவுரைகள்
2. பூர்வாசார்ய தமிழ்ப்பிரபந்தவுரைகள்
3. ஸகல பூர்வாசார்ய ஸ்தோத்ரவுரைகள்
4. ஆழ்வாராசார்யப் பிரபாவ நூல்கள்
5. இதிஹாஸ பு[illegible] சரித்திர நூல்கள்
[illegible] ரஹஸ்யார்த்த வி[illegible] நூல்கள்
[illegible] தாத்பர்ய பொரு[illegible] விளக்க நூல்கள்
[illegible] தலக்ஷணவிசார நூ[illegible]ல்கள்
9. ஸத்ஸம்ப்ரதாயார்த்த விளக்க நூல்கள்
10. லோகாபிராம நூல்கள்
11. பரபக்ஷப்ரதிக்ஷேப நூல்கள்
12. உபந்யாஸக ஸௌபாக்ய வெளியீடுகள்
13. வடமொழி நூல் திரள்கள்
14. ஹிந்தீ பாஷையில்
15. தெலுங்கு பாஷையில்
16. பூர்வாசார்ய க்ரந்த வெளியீடுகள்

விரிவான கேடலாகுகள் தருவித்து விவரமறியவும்.

If un-delivered please return to:

**P. B. ANNANGARACHARYA,**

KANCHEEPURAM-3.

[illegible] Krishna va[illegible]
[illegible]n Street, Na[illegible]un[illegible]

Edited and Published by P. B. Annangaracharya Swami
for Madras Satgrantha Prakasana Sabha,
Printed by T. A. P. Srinivasavaradan at Sri Venkateswara Press,
Sannidhi Street, Kanchipuram-3.